# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. "தமிழுக்கும் அமுது என்று பேர்..." இப்பாடலைப் பாடியவர் ________________ .

   ( பாரதியார், ஔவையார், பாவேந்தர் )

2. ஆடற்கலை பற்றிக் கூறும் காப்பியம் ________________ .

   ( சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி )

3. பொங்கலன்று புதுப்பானைக்கு ______________________ இலை கட்டுவர்.

   ( பலா, இஞ்சி, வாழை )

4. ________________ நன்மையே செய் !

   ( நீ, நீங்கள், நீர் )

5. நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்பவர் ________________ .

   (உழவர், மீனவர், மருத்துவர்)

6. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை" எனும் பாடல் இடம்பெற்ற நூல்________________ .

   ( நாலடியார், மூதுரை, நல்வழி )

7. விளையாட்டுத்திடலில் ஓடிய மாணவன் நீரை _______________ எனக் குடித்தான்.

   ( கலகல, மடமட, சலசல )

8. பின்வருவனவற்றுள் பொதுஉடைமை அல்லாதது

_______________ .

( வீடு, பள்ளி, நூலகம் )

9. தஞ்சைப் பெருங்கோவில் இராசராச சோழனால்

_______________ .

( கட்டப்பட்டது, கட்டியது, கட்டினார் )

10. அன்னை தெரேசா துன்புற்ற மக்களுக்குப் _______________ செய்தார்.

( பனி, பணி, பநி )

11. காலமழை என்பதைப் பிரித்து எழுதினால் _______________ .

( காலம் + மழை, கால + மழை, கால + ம்மழை )

12. தீயோரின் நட்பு _______________ த் தரும்.

( துன்பத்தை, இன்பத்தை, மகிழ்வை )

13. காடுபடு செல்வங்களுள் ஒன்று _______________ .

( மயிற்பீலி, அரிசி, ஆனைந்து )

14. ஆதிகாலத்தில் செய்திகளை அறிவிக்கப் பயன்படுத்தப்பட்ட முழவு _______________ .

( தப்பட்டை, மேளம், பறை )

15. **நொடி:**

நாடெல்லாம் சுற்றிவரும் நாட்டுக்குள் வராது. அது

_______________ .

( நீருந்து, மிதியுந்து, சிற்றுந்து )

16. உண்டு என்பதன் எதிர்ச்சொல் ______________ .

( ஆம், இல்லை, இருக்கின்றது )

17. மாணவர்கள் ஓவியம் ______________ .

( வரைந்தனர், வரைந்தன, வரைந்தான் )

18. கல் + குகை என்பதைச் சேர்த்து எழுதினால் ______________.

( கற்குகை, கல்குகை, கட்குகை )

19. தித்திப்புச் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு ______________ .

( பாக்கு, உப்பு, தேன் )

20. காடும் காடுசார்ந்த இடமும் ______________ .

( குறிஞ்சி, முல்லை, மருதம் )

21. ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி ______________ நாட்டில் தொடங்கப்பட்டது.

( உரோம , சீன , கிரேக்க )

22. மருதநில மக்கள் ______________ .

( வேளாளர், குறவர், ஆயர் )

23. மன்னார்ப் பட்டினம் ______________ கொண்டு விளங்கியது.

( கல்வி கேள்விகளில், இன்பதுன்பம், பேரும்புகழும் )

24. ஈழத்தின் கீழ்த்திசையில் _______________ அமைந்துள்ளது.

( யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் )

25. தெற்காசிய நாடுகள் எங்கும் _______________ புலிக்கொடி பறந்தது.

( சோழரது, பாண்டியரது, சேரரது )

26. நான் இயற்கையின் அழகை _______________ வியந்தேன்.

( வண்ணவண்ண, எண்ணிஎண்ணி, கணீர்கணீர் )

27. அரசனை "வரப்புயர" என வாழ்த்திய புலவர் _______________ .

( ஔவையார், திருவள்ளுவர், பாவேந்தர் )

28. மூவேந்தர்கள் பாரியை _______________ ப் போரிட்டனர்.

( வாழ்ந்து, சென்று, எதிர்த்து )

29. ஈரூடக உயிரிகளில் ஒன்று _______________ .

( முதலை, மீன், கணவாய் )

30. அறிவியற் சிந்தனை வளர்ச்சியினால் _______________ நூற்றாண்டில் புதிய அறிவியற் கருவிகள் தோன்றின.

( 18 ஆம், 19 ஆம், 17ஆம் )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. ஆண் ________________ தோகை அழகாக இருக்கும்.

   ( மயில் )

2. நாங்கள் வீதியில் ________________ க் கண்டோம்.

   ( நண்பன் )

3. கதிரவனால் ________________ வேண்டிய மழை கிடைக்கின்றது.

   ( பயிர் )

4. அருவி ________________ வீழ்கின்றது.

   ( மலை )

5. இனியன் தனது ________________ பெரிய முதலாளி ஆனான்.

   ( நேர்மை )

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பழந்தமிழர் சிறந்து விளங்கிய கலைகளில் இரண்டினைத் தருக.

______________________________________________

______________________________________________

2. பாவேந்தரின் இயற்பெயர் என்ன? அவர் எழுதிய நூல் ஒன்றின் பெயரைத் தருக.

______________________________________________

______________________________________________

3. மீன்பிடித்தொழில் எந்நிலத்திற்கு உரியது?

______________________________________________

______________________________________________

4. மாமல்லபுரத்தைச் சிற்பக்காடாக்கியவன் யார்?

______________________________________________

______________________________________________

5. தமிழர் வீரத்தோடு தொடர்புடைய மரம் எது?

______________________________________________

______________________________________________

6. இளங்கோவடிகள் எழுதிய மிகச் சிறந்த காப்பியம் எது ?

______________________________________________

______________________________________________

7. மன்னாரில் உள்ள வயல்களுக்குத் தேவையான நீர் எந்தக் குளத்திலிருந்து பெறப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

## பூக்கள்

| | | |
|---|---|---|
| விரும்பும் | ஆடும் | வீசும் |
| பூக்கள் | ஆட்டம் | |

வண்ண வண்ணப் பூக்கள் பார்!

மணம் ________________ பூக்கள் பார்!

எண்ணில் அடங்காப் பூக்கள் பார்!

எவரும் ________________ பூக்கள் பார்!

தோட்டம் முழுதும் பூக்கள் பார்!

தூய்மை நிறைந்த ________________ பார்!

________________ போடும் பாவை போல்

அசைந்தே ________________ பூக்கள் பார்!

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| ஆங்கிலேயர் | நிறைந்து | மகிழ்ந்தனர் |
| இறப்பர் | முகில்கள் | |

மலையகம் இயற்கை அழகுகள் நிறைந்த இடமாகும். இது தென்றல் வீசும் சோலைகளால் ________________ இருக்கின்றது. வானுற ஓங்கி வளர்ந்த மரங்களின் மேல் ________________ படர்ந்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். மலைகளிடையே அருவிகள் தவழ்ந்து வருவதும் குன்றுகளிடையே ஏறிப்பாய்வதும் அழகிற்கு அழகு சேர்க்கின்றன. ________________ ஈழத்தைக் கைப்பற்றிய பின், மலையகத்தின் இயற்கைவளங்களைக் கண்டு ________________ . அங்கு காணப்பட்ட காலநிலைக்கு ஏற்ப தேயிலை, கோப்பி, ________________த் தோட்டங்களை உருவாக்கினர். மக்கள் நடமாட்டம் அற்ற பகுதியாக விளங்கிய மலையகத்தைச் செல்வச் செழிப்புள்ள இடமாக மாற்றியவர்கள் தமிழரே!

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஒரு பெரியவருக்கு நான்கு பிள்ளைகள் . அவர்கள் ஒற்றுமையின்றி அடிக்கடி சண்டை பிடித்தனர். அதனால், அவர்களுக்கு அறிவுரை கூற எண்ணினார். ஒரு நாள் அவர்களை அழைத்து, ஒரு தடிக்கட்டை அவர்களிடம் கொடுத்தார்."இந்தத் தடிக்கட்டை முறியுங்கள்"எனக் கூறினார். பிள்ளைகள் தடிக்கட்டை முறிக்க முயற்சி செய்தனர். ஆனால், ஒருவராலும் முடியவில்லை. பின்னர் பெரியவர் அதிலுள்ள தடிகளைத் தனித்தனியாக எடுத்துக் கொடுத்தார். தனித்தனியாகத் தடிகள் இருந்ததால் எளிதாக முறித்தனர். "பிள்ளைகளே! தடிகள் கட்டாக இருந்தபோது உங்களால் முறிக்க முடியவில்லை. அதுபோல நீங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால், யாராலும் உங்களை வெல்ல முடியாது. ஒற்றுமை இல்லாவிடின், எதிரிகள் உங்களை வென்று விடுவார்கள். அதனால், ஒற்றுமையாக வாழுங்கள்" என்றார்.

1. பெரியவருக்கு எத்தனை பிள்ளைகள் ?

   ______________________________________________

2. ஏன் பெரியவர் பிள்ளைகளுக்கு அறிவுரை கூற எண்ணினார்?

   ______________________________________________

   ______________________________________________

3. தனித்தனியாகத் தடிகள் இருந்ததால் எவ்வாறு முறித்தனர்?

   ______________________________________________

4. ஒற்றுமை இல்லாவிடின், யார் எங்களை வென்று விடுவர்?

   ______________________________________________

5. ஒற்றுமையாக வாழுங்கள் என்று கூறியவர் யார்?

   ______________________________________________

புள்ளிகள் 10

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**நான் கடற்கரைக்குச் சென்று நண்பர்களுடன் விளையாடினேன். நான் மணல்வீடு கட்டினேன். நான் பந்தடித்தும் விளையாடினேன். எனது அப்பா எனக்கு உணவு வாங்கித் தந்தார். எனது அம்மா கடையில் எனக்கு விளையாட்டுப் பொருள் வாங்கித் தந்தார்.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ பாவேந்தர்
- ✸ நோயற்ற வாழ்வு
- ✸ மரங்கள்
    - ➢ மரங்களின் பெயர்கள்
    - ➢ மரங்கள் வளரும் இடங்கள்
    - ➢ மரங்களில் இருந்து பெறப்படும் பொருட்கள்
    - ➢ மரங்களினால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 15